III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.2/2012

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 02-03-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : A.Manova | Village | : |
| Father's Name | : Adimoolam | Calling | : |
| Age | : | Taluk | : |

**முதலாம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது இரண்டாவது வழக்கறிஞர் அறிவிப்புக்கு இரண்டாம் பிரதிவாதி 04.06.2011 அன்று ஒரு பதில் அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரிதான். அந்த பதிலில் தனது தாயாரின் கிரைய பத்திரங்களை நான் திருடிவிட்டதாக அதில் குறிப்பிட்டிருந்தார் என்றால் சரியல்ல. இரண்டாம் பிரதிவாதி கொடுத்த மேற்கூறிய பதில் அறிவிப்பை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம். நான் தாக்கல் செய்த ஆவணங்களில் அந்த பதில் இல்லை. இரண்டாம் பிரதிவாதி கொடுத்த அந்த பதில் அறிவிப்பில் எனக்கும் 3 வது பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஏற்படுத்தப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறானது. 2 வது பிரதிவாதி தனது வழக்கறிஞர் ஊரில் இல்லாத காரணத்தினால் தானே பதில் எழுதி அனுப்புவதாக அதில் குறிப்பிட்டுள்ளார். 2 ஆம் பிரதிவாதி 26.04.2011 அன்று அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு அவர் தனது கைப்பட பதில் எழுதி அனுப்பியிருந்தார். வா.த.சா.8 ல் நான் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தில் உள்ள விசயங்கள் மறுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

ஜான் வெஸ்லி, கிரிஸ்டிபெல், பிலால் அகமது ஆகியோரை, 2 வது ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட நாளிலேயே, அதாவது 08.04.2011 அன்று துரை ராஜ் ஆந்திராவிற்கு கடத்தி சென்றுவிட்டார். ஆந்திராவில் எந்த ஊரில் கடத்தி வைத்திருந்தார்கள் என்பது எனக்கு தெரியாது. 08.04.2011 லிருந்து எவ்வளவு காலம் அவர்களை துரைராஜ் கடத்தி வைத்திருந்தார் என்றால், நான் வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் ஜான் வெஸ்லி தப்பித்து வந்தார். இந்த விவரங்களை எனக்கு பிலால் அகமது கூறினார். பூந்தமல்லி 2 வது மாவட்ட நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணைக்கு வந்த போது ஜான் வெஸ்லி தனக்காக வைக்கப்பட்டிருந்த வக்கீல் பற்றி தனக்கு

தெரியாது என்று கூறினார். இந்த விவரங்கள் நேரடியாக எனக்கு தெரியாது. இந்த விவரங்களை நான் வழக்கு தாக்கல் செய்ததற்கு பிற்பாடு தெரிந்து கொண்டேன். நான் வழக்கு தாக்கல் செய்த மாதம் நவம்பர் 2011. அதற்கு பிறகு தான் பிலால் எனக்கு சொல்லி மேற்கூறிய விவரங்கள் தெரியவந்தது. எதிர் வழக்குரைக்கு தாக்கல் செய்யப்பட்ட எனது மறு பதிலில் நான் மேற்கூறிய விவரங்களை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. (குறுக்கு விசாரணையின் போது அந்த விவரங்கள் pleadings-ல் இல்லாததாகையால் அது சம்மந்தமான கேள்விகளை எழுப்ப சாட்சியின் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் எழுப்பும் ஆட்சேபனை பதிவு செய்யப்படுகிறது.) இரண்டாவது பிரதிவாதியின் இரண்டாவது அறிவிப்புக்கு பின்னர் ஐந்தரை மாதங்களுக்கு பிறகு தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் எந்த தேதியில் தாக்கல் செய்தேன் என்று எனக்கு தெரியாது. நான் முதலில் இந்த வழக்கை திருவள்ளூரில் தாக்கல் செய்தேன். நீதிமன்றத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட தேதி 22.11.2011 என்றால் சரிதான். எனது வழக்குரையில் நான் கையெழுத்து போட்ட தேதி 10.11.2011. 2 வது பிரதிவாதியின் 2 வது அறிவிப்புக்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பிய ஐந்தரை மாதங்கள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்ததற்கான காரணம் வழக்கு ஆவணங்களை வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டேன். மீதி கிரைய எதொகையாக ரூ.19,25,000-ஐ காண்பித்திருந்தேன். அந் த தொகையை நான் டெபாசிட் செய்தேனா என்றால் இல்லை. நான் டெபாசிட் செய்ய தயாராக இருந்தேன். அந்த தொகை என்னிடம் இருப்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிலால் அகமது என்னிடமிருந்து ரூ.3,25,000 வாங்கியிருந்தார். மேலும் ரூ.75,000 முன் தொகையாக பிலால் வாங்கியிருந்தார். இந்த விவரங்களை எனது வழக்கறிஞரிடம் கூறிய போது பின்னிட்டு ரூ.19,25,000-ஐ டெபாசிட் செய்து கொள்ளலாம் என்று கூறிவிட்டார். இன்றைய தேதி வரை நான் ரூ.19,25,000-ஐ டெபாசிட் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிலாலுக்கு நான் ரூ.3,25,000-ஐ கொடுத்த விவரம் வழக்குரை தயார் செய்யப்படும் போதே தெரியும் என்றால் பிறகு தான் தெரியும். வழக்குரை தாக்கல் செய்யப்பட்ட பிறகு 2013 ல் நான் எனது வழக்கறிஞரிடம் இது பற்றி கூறினேன். நான் 3 ஆம் பிரதிவாதியுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம் பொய்யானது என்றும் ஆதலால் தான் நான் முன்னுக்கு பின்

முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 08.04.2011 முதல் 2012 ஆம் வருடம் வரை ஜான் வெஸ்லி ஆந்திராவில் தான் இருந்தாரா என்றால், கிரைய பத்திரம் ஏற்படுத்துவதற்காக துரைராஜ் ஜான் வெஸ்லியை ஒவ்வொரு முறையும் கொன்னூர் பதிவு அலுவலகத்திற்கு அழைத்து வந்தார். ஜான் வெஸ்லி அவ்வாறு 25.04.2011, 11.05.2011 மற்றும் 17.05.2011 ஆகிய தேதிகளில் கொன்னூர் பதிவு அலுவலகத்திற்கு வந்தார். மேற்கூறிய மூன்று தேதிகளில் ஜான் வெஸ்லி கொன்னூர் பதிவு அலுவலகத்திற்கு வந்த விவரத்தை பிலால் என்னிடம்ட தெரிவித்தார். ஜான் வெஸ்லி அந்த பதிவு அலுவலகத்திற்கு வந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. மேற்கூறிய மூன்று தேதிகளை பிலால் என்னிடம் கூறியதன் வகையில் எனக்கு ஞாபகத்தில் உள்ளதா என்றால், பிலால் என்னிடம் கூறியதை தவிற நான் பின்னிட்டு வில்லங்க சான்றிதழ் பெற்று பார்த்த வகையில் எனக்கு தெரியவந்தது. துரை ராஜ் நான் சொல்லியிருப்பது போல் கடத்தல் எதுவும் செய்யவில்லை என்றும், நான் பிலால் கூறியதாக தவறாக விவரங்களை கூறியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. 25.04.2011 அன்று கிரைய பத்திரம் எழுதி கொடுத்தது எனக்கு நேரடியாக தெரியாது. 25.04.2011 தேதியிட்ட கிரைய பத்திரத்தில் யார் யார் தரப்பினர்கள் என்றால் ஜான் வெஸ்லி மற்றும் துரை ராஜ். 25.04.2011 அன்று கிரிஸ்டிபெல்லும் ஜான் வெஸ்லியும் துரை ராஜுக்கு பணத்தை பெற்றுக் கொண்டு முறையாக கிரைய பத்திரம் எழுதி கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது தவறானது. கிரிஸ்டிபெல் ஜான் வெஸ்லிக்கு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தன் பேரில் அதன் பின்னர் ஜான் வெஸ்லி துரை ராஜுக்கு எழுதி கொடுத்தார். ஜான் வெஸ்லி துரை ராஜுக்கு எத்தனை கிரைய பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் மூன்று. ஜான் வெஸ்லியை கட்டாயப்படுத்தி துரை ராஜ் கிரைய பத்திரங்களை எழுதி வாங்கியது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஜான் வெஸ்லி துரை ராஜுக்கு நான்கு பத்திரங்கள் எழுதி கொடுத்துள்ளார் என்றால், மூன்று தான் எனக்கு தெரியும் நான்காவது எனக்கு தெரியாது. 5 வது பிரதிவாதி சதீஷ் 4 வது பிரதிவாதி துரை ராஜுக்கு 12.10.2012 அன்று கிரைய பத்திரம் எழுதி கொடுத்துள்ள விவர்ம் எனக்கு தெரியாது. பிறகு தான் தெரியும். 2012 லிருந்து 2013 வரையிலான காலத்தில் நான் வில்லங்கம் சான்றிதழ் பெற்றேன். 2012 முதல் 2013 வரை நான் வில்லங்கம் போட்டு பார்த்ததில்,

ஜான் வெஸ்லி துரை ராஜ்ுக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திர விவரங்களை தெரிந்து கொண்டேன். நான் 2012-2013 காலத்தில் வில்லங்கம் போட்டு பாத்திருந்தால் ஐந்து கிரைய பத்திரம் பற்றிய விவரங்கள் தெரிந்திருக்கும் என்றால் சரிதான். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணமான 7085 சதுரடியில் 5825 சதுரடி ஐந்து பத்திரங்கள் மூலம் விற்க்கப்பட்ட விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் பிலால் சொன்னதன் பேரில் வில்லங்கம் போட்டு பார்த்த பின்பு தெரிய வந்தது. வழக்கு தாக்கல் செய்யும் போதே மூன்று கிரைய பத்திரங்கள் செல்லத்தக்கதல்ல என்று பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 4வது கிரைய பத்திரம் செல்லத்தக்கதல்ல என பரிகாரம் கேட்பதாக குறிப்பிடப்பட்டு அடிக்கப்பட்டதற்கான காரணம், எனக்கு தெரியாது. வழக்குரை தயார் செய்யப்பட்டு என்னிடம் காண்பிக்கப்படும் போது அந்த பரிகாரம் இருந்தது. அதன் பின்னர் அடிக்கப்பட்டுள்ளது. 4வது பரிகாரத்தை வழக்குரையில் அடித்தது யார் என்று எனக்கு தெரியாது. எனது வழக்கறிஞர் தான் அந்த 4வது பரிகாரத்தை அடித்துள்ளார் என்றும் அந்த விவரம் கூட எனக்கு தெரியவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அவ்வாறு அடித்திருப்பதற்கு அருகில் எனது வழக்கறிஞரின் சுருக்கொப்பம் உள்ளது என்றால், சுருக்கொப்பம் உள்ளது. அது எனது வழக்கறிஞருடையதா என்பது எனக்கு தெரியாது. இந்த வழக்கு கோப்பிற்கு எடுக்கப்படும்போதே 25.04.2011, 11.05.2011, 17.05.2011 தேதியிட்ட ஆவணங்களை மட்டும் தான் செல்லாதது என விளம்புகை பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஜான் வெஸ்லி துரை ராஜுக்கு நான்கு கிரைய பத்திரங்கள் எழுதி கொடுத்துள்ளார் என்றால் மூன்று தான் எழுதி கொடுத்துள்ளார். பிராதில் அடிக்கப்பட்டுள்ள நான்காவது பரிகாரத்தில் இரண்டாவது பிரதிவாதி 4ஆம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2வது பிரதிவாதி 4வது பிரதிவாதிக்கு நான்கு பத்திரங்கள் எழுதி கொடுத்துள்ள நிலையில் ஒன்றை விட்டுவிட்டு மூன்று பத்திரங்கள் மட்டும் செல்லத்தக்கதல்ல என பரிகாரம் கேட்டுள்ளதற்கான காரணம் நான்காவது பத்திரத்தை ஐந்தாம் பிரதிவாதி நான்காம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துள்ளார். 15.06.2011ல் 2ஆம் பிரதிவாதி 4ஆம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய

பத்திரம் செல்லாது என்று நான் பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். 5 ஆம் பிரதிவாதி 4 ஆம் பிரதிவாதிங்கக எழுதி கொடுத்த பத்திரம் செல்லாது என்று நான் பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை. அது வழக்கிற்கு பின்னர் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 5 ஆம் பிரதிவாதி சதீஷ் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கு பின்னர் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். மூன்று கிரைய பத்திரங்களிலும் எவ்வளவு விஸ்தீணம் உள்ள சொத்து விற்கப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அந்த விவரங்களை பிலால் என்னிடம் கூறினாரா என்றால் இல்லை. மூன்று கிரைய பத்திரங்களுக்கு முன்னிலையில் 2 ஆம் பிரதிவாதிக்கு எவ்வளவு கிரைய தொகை கொடுக்கப்பட்டது என்பது எனக்கு நேரடியாக தெரியாது. வா.தசா.9 வில்லங்க சான்றிதழ் 17.06.2011 அன்று பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் மூலம் கிரிஸ்டிபெல் மற்றும் ஜான் வெஸ்லியின் அதிகாரம் பெற்ற முகவர் சதீஷ் என்பது தெரியவந்துவிட்டது என்றால் சரிதான். சதீஷ் அதிகாரம் பெற்ற முகவர் என்ற முறையில் துரை ராஜூடன் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது என்பது வா.த.சா.9 ல் குறிப்பிடப்பட்டுள்ளது. 2018 ல் தான் சதீஷ் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டார் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும் காலத்திலேயே சதீஷ் அதிகாரம் பெற்ற முகவர் என்று தெரிந்த நிலையில் பின்னிட்டு காலதாமதமாக 2018 ல் சேர்க்கப்பட்டிருப்பதற்கான காரணம் வழக்கு பதிவு செய்த காலத்தில் பவர் பத்திரம் மட்டும் இருந்தது. வழக்கு தாக்கல் செய்த பின்னர் கிரைய பத்திரம் ஏற்படுத்தப்பட்டது. சதீஷ் துரை ராஜுக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தை ரத்து செய்ய நான் பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான்.

(முதலாம் பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)